ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## மூன்றாம் வகுப்பு

(மூன்றாம் பருவம்)

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

"நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்" என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

"ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்" என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



“செந்தமிழ் வாசகம்” என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த “செந்தமிழ் வாசகம்”. தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (**“CCE METHOD”**) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# ஆசிரியர்க்கு

குழந்தைகளை வாழ்க்கைக்கு தயார்படுத்துவது கல்வியன்று. அதற்கு பதிலாக குழந்தைகளின் வாழ்க்கையையே கல்வியாக மாற்றுவதே உண்மையான கல்வியாகும். குழந்தைகளுக்கு மனனம் செய்யச் சொல்லி கல்வியளிப்பதை விட கல்வியை அவர்களாகவே பெறுவதற்கான மனநிலைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதே இக்குழந்தை மையக் கல்வி ஆகும்.

1. குழந்தைகள் எல்லோரிடத்திலும் வெளிப்படையாக பயமின்றி, தயக்கமின்றி தமது மனதில் தோன்றும் கருத்துகளை கோர்வையாக எடுத்துக்கூற மற்றும் வெளிப்படுத்த உதவுவது **வாங்க பேசலாம்.**





2. வாழ்க்கையையும், கல்வியையும் தனித்தனியாகப் பார்க்காமல் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தி ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க உதவுவது **சிந்திக்கலாமா?**

3. குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டுகளின் மூலமாகவே தன்னுடைய தாய்மொழித் திறனை மேம்படுத்திக் கொள்ள உதவுவது **மொழிவிளையாட்டு.**





4. இக்காலக் குழந்தைகளின் புதுப்புது சிந்தனைகளையும், படைப்பாற்றலையும், மகிழ்ச்சியுடன் கூடிய ஆர்வத்தையும் தூண்டி விட உதவுவது **கலையும் கைவண்ணமும்.**

5. எல்லாச் செயல்களையும் திட்டமிட்டு செய்தால் வெற்றி நிச்சயம் என்பதை அறிந்து கொள்ள உதவுவது **செயல்திட்டம்**.

செயல்திட்டங்களை மாணவர்கள் மேற்கொள்ளும் போது தமது சொந்த, உண்மையான விருப்பங்களை இனம் கண்டு செயல்படுத்த முனைவார்கள். தகவல்களை தேடி கேட்டுப் பெறும் ஆற்றல் பெருக உதவுவது **செயல்திட்டம்**.






6. புத்தக அறிவைத் தாண்டி பாடப்பொருளைப் பற்றிய மேலும் பல புது தகவல்களை அறிந்து கொள்ள உதவுவது **அறிந்து கொள்வோமா?** ஆக்கப்பூர்வமான கற்றல் நிகழ்வுக்கு **அறிந்துகொள்வோமா?** செயல்பாடு உதவுகிறது.

7. கூடி வாழும் ஆற்றல் பெற்று மாணவர்கள் சமூகவசமாகும் திறன் பெறவும், ஒற்றுமையின் அவசியம் பற்றி உணரவும் உதவும் படைப்பே **இணைந்து செய்வோம்.**




ஆசிரியர்களின் தனித்திறனும், மாணவர்களின் படைப்பாற்றலும் இணையும் வேளையில் தான் கல்வியானது முழுமை பெறுகிறது.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும், இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும், ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.





# பொருளடக்கம்




| வ. எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | உள்ளங்கையில் ஓர் உலகம் | 7 |
| 2. | மலர்க்கொடி | 13 |
| 3. | வீம்பால் வந்த விளைவு | 20 |
| 4. | மழைநீர் | 30 |
| 5. | காகமும் நாகமும் | 35 |
| 6. | நல்வழி | 42 |
| 7. | தமிழ்மொழியின் பெருமை | 48 |
| 8. | அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள் | 54 |
| 9. | பட விளக்க அகரமுதலி | 60 |
| | அகரமுதலி | 62 |




# 1 உள்ளங்கையில் ஓர் உலகம்



உலகைச் சுற்றிக் காட்டிடுவேன்
உனக்கு மகிழ்ச்சியைத் தந்திடுவேன்
என்ன வேண்டும் என்றாலும்
எண்ணும் முன்னே சொல்லிடுவேன்

இணைய வழியில் அனைவரையும்
இணைந்தே இருக்கச் செய்திடுவேன்
கடிதம் அனுப்ப வேண்டுமென்றால்
விரைந்தே அனுப்பத் துணைபுரிவேன்

தகவல் களஞ்சியம் நான்தானே
தரணி போற்றி மகிழ்ந்திடுமே
உலகைச் சுருக்கி உன்கையில்
உலவிடும் கணினி நான்தானே

என்றும் ஓய்வு எனக்கில்லை
எதிலும் சோர்வு என்றில்லை
எந்தப் பொருளின் செய்தியையும்
எடுத்துத் தருவேன் ஒருநொடியில்

உள்ளங்கையில் ஓர் உலகம்
உள்ளதைக் காட்டும் கண்ணாடி
என்றே என்னை எல்லாரும்
ஏற்றம் கொண்டே அழைத்திடுவார்

## பாடல் பொருள்

கணினி நமக்குத் தகவல்களை உடனடியாகத் தருவதால் மன மகிழ்வு ஏற்படுகிறது. இணையத்தின் மூலமாக நல்ல நட்பை உருவாக்குகிறது. கடிதப் போக்குவரத்தை விரைந்து செயல்படுத்துகிறது. கணினி, சிறந்த தகவல் களஞ்சியமாகச் செயல்படுகிறது. உலகையே உள்ளங்கையில் தரவல்லது. ஓய்வில்லாமல் உழைப்பதால், எந்தச் செய்தியைக் கேட்டாலும் உடனடியாக எடுத்துத் தருகிறது. உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடியாகக் கணினி செயல்படுகிறது.

## சொல் பொருள்

தரணி - உலகம்
சோர்வு - களைப்பு
ஏற்றம் - உயர்வு

### உரையாடலாம் வாங்க!



பாடலை இசை நயத்துடன் பாடி மகிழ்க.
இன்றைய சூழலில் கணினியின் தேவை குறித்துக் கலந்துரையாடுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. 'ஏற்றம்' என்ற சொல்லின் பொருள் ______________________
   (அ) சோர்வு (ஆ) தாழ்வு
   (இ) உயர்வு (ஈ) இறக்கம்

2. 'என்று + இல்லை' - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________
   (அ) என்றில்லை (ஆ) என்றும்இல்லை
   (இ) என்றுஇல்லை (ஈ) என்றல்லை

3. 'முன்னே' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ______________________
   (அ) எதிரே (ஆ) பின்னே
   (இ) உயரே (ஈ) கீழே

4. கணினி__________________________ வழியே அனைவரையும் இணைக்கிறது.
   (அ) தகவல் களஞ்சியம் (ஆ) செய்தி
   (இ) கடிதம் (ஈ) இணையம்

5. 'களஞ்சியம்' என்ற சொல்லின் பொருள் ______________________
   (அ) சேமிப்புப் புத்தகம் (ஆ) அளவுக்கதிகமான தானியங்கள் சேமிக்கும் இடம்
   (இ) நெற்பயிர் (ஈ) வயல் பகுதி

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. தகவல்களை எதன் வழியே எளிமையாகப் பெற முடியும்?
2. கணினியின் பயன்கள் குறித்து இப்பாடலின் வழியே நீ அறிந்து கொண்டவற்றைக் கூறுக.
3. ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுவோமா?

   காட்டிடுவேன்     தந்திடுவேன்     ------------------

   ------------------     ------------------     ------------------

## சொல் விளையாட்டு

**கணினியோடு தொடர்பில்லாத எழுத்துகளை நீக்கிச் சொற்களை உருவாக்குக. எடுத்துக்காட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| நி | ன | தி | மி | ரை |

திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒ | பு | ன | ல | பு | ம் |
| க் | சொ | வ | டு | ரை | கி |
| ஈ | னை | ணை | ய | இ | ம் |
| ஞா | கா | க | மு | ல் | நூ |
| டு | சை | தொ | இ | ரை | தி |

## இதன் தமிழ்ப்பெயர் என்ன?

1. Control Process Unit ( CPU ) - மையச்செயலகம்
2. Browser - உலாவி
3. Mouse - சொடுக்கி / சுட்டி
4. Desktop - முகத்திரை
5. Icon - படவுரு
6. Modem - இணக்கி
7. Pen drive - விரலி
8. Scanner - வருடி
9. Virus - நச்சு நிரல்
10. Web Cam - இணையபட
11. Blue tooth - ஊடலை
12. WIFI - அருகலை
13. Hot Spot - பகிரலை



## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?

● அலையில் மிதந்த மீனை
வலையில் பிடிச்ச விழுகல
கலகலன்னு சிரிப்பு வரல.



● மரக்கிளைய கரத்தால் பற்றி
தொங்கயில கையச் சுழற்றினதால
கீழே விழுந்தேன்.



● காத்துல விழுந்த பழத்துல
சுவையில்லனு சொல்ல முடியல
இந்த நினைப்பில நண்பன்
விழுந்தான் பள்ளத்தில



## கலையும், கைவண்ணமும்

கொடுக்கப்பட்ட படத்திற்கு வண்ணம் தீட்டி மகிழ்க.



## குழு விளையாட்டு : சொற்களைச் சொல்! மகுடம் சூட்டிக் கொள்!

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்க. சொற்களுக்குரிய அட்டைகளை




என்றவாறு தயார் செய்து கொள்க. எழுத்துகளுக்குரிய அட்டைகளை இ, க, ம, உ, ஒ என்றவாறும் தயார் செய்து கொள்க.




முதல் குழுவில் உள்ளவர்கள் எழுத்துகளை ஒவ்வொருவராகக் கூற இரண்டாம் குழுவில் உள்ளவர்கள் உரிய சொற்களைக் கூறச் செய்க. பின்னர், குழுவை மாற்றி விளையாட்டைத் தொடர வேண்டும். சரியாகச் செய்த மாணவர்களுக்கு மகுடம் வைத்துப் பாராட்டுக.

## இணைந்து செய்வோம்

பின்வரும் செயல்களுக்குப் பொருத்தமான படத்தினைப் பொருத்துக.

1. மின் அஞ்சல் -
2. புலனம் -
3. முகநூல் -
4. ஊடலை -
5. அருகலை -
6. விரலி -
7. சொடுக்கி -
8. உலாவி -
9. பகிரலை -
10. இணக்கி -



## அறிந்து கொள்வோம்

அலைபேசியை முதன் முதலில் கண்டறிந்தவர் மார்ட்டின் கூப்பர்.

மின்னல் வெட்டும்போது அலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், அலைபேசி இடிதாங்கிபோல் செயல்பட்டு மின்னலை உங்கள் பக்கம் ஈர்த்து விடும்.

## சிந்திக்கலாமா?

இன்று செல்வத்தின் பிறந்த நாள். செல்வத்தின் மாமா வெளியூரில் வசிக்கிறார். பிறந்த நாளுக்கு அவர் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவனது மாமா எப்படி வாழ்த்துகள் தெரிவிப்பார்?

## செயல் திட்டம்

கணினியில் புதிர் விளையாட்டுகளை விளையாடி மகிழ்வோம்.

# 2 மலர்க்கொடி



தோப்பூர் ஓர் அழகிய இயற்கை எழில் நிறைந்த கிராமம். மலையடிவாரம் ஆதலால் பூக்களும், மரங்களும், செடிகளும் நிரம்பிய அழகிய ஊர். மலர்க்கொடி தன் பெற்றோருடன் அங்கு வாழ்ந்து வந்தாள். மலர்க்கொடியின் தந்தை அங்குள்ள காட்டிற்கு தினமும் சென்று புதிய புதிய மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வந்தார். காட்டில் கிடைக்கும் புதியவகை பூச்செடிகளையும் தன் தோட்டத்தில் நட்டு பராமரித்து வந்தார். அதனால், மலர்க்கொடியின் தோட்டத்திற்கு பல விதமான பறவைகளும், பட்டாம்பூச்சிகளும், வண்டுகளும் வந்து சென்றன. மலர்க்கொடியின் பெற்றோர்கள் இயற்கையை நேசித்தும் பராமரித்தும் வந்தனர். மலர்க்கொடி பல நேரங்களில் தன் அப்பாவின் கைபேசியுடன் விளையாடிக் கொண்டே இருப்பாள். அதனால் கண்அயர்ந்து உறங்கி விடுவாள்.

இதனைக் கண்டு அவருடைய பெற்றோர்களுக்கு மிகவும் வருத்தம். ஒரு நாள் இராணுவத்தில் வேலை செய்யும் மாமா - அத்தையுடன் மலர்க்கொடியைப் பார்க்க வந்தார். அவள் எந்நேரமும் கைப்பேசியுடன் இருப்பதைக் கண்டு அப்பழக்கத்தை மாற்ற நினைத்தார். மலர்க்கொடி பள்ளிக்குச் செல்லும்போது மாமாவிடம் காசு கேட்பாள். மாமா காசு தந்து அந்தக் காசைச் சேமித்துக்கொள் என்றும், அத்தையிடம் கூறி விதவிதமான பலகாரங்களைச் செய்து தருவதாகவும் கூறினார்.

மலர்க்கொடி மகிழ்ச்சியில் குதித்தாள். அப்போது அவளது மாமா அவர் தரும் ரூபாய் மற்றும் பலகாரத்திற்கு ஏற்றாற்போல் புதிது புதிதாக மலர்களின் பெயர்களையும், பறவைகளின் பெயர்களையும் கூறவேண்டும் என்றார். மலர்க்கொடி மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டிச் சென்றாள். மாமா ஊருக்கு போகும்வரை விதவிதமான பலகாரங்கள் கிடைக்கும் என நினைத்துக் கொண்டாள். உடனே ஓடிச்சென்று ரோசா, காகம் எனக் கூறி மாமாவிடம் ஒரு ரூபாயும், அத்தை சுட்டு வைத்த முறுக்கையும் வாங்கிக் கொண்டாள்.

இரண்டாம்நாள் காலை வேகமாக தோட்டத்திற்குச் சென்று பார்த்தாள். மாமாவிடம் ஓடி வந்து மல்லிகை, முல்லை, புறா, மைனா என்று கூறினாள். மாமா இரண்டு ரூபாய் கொடுத்தார். அத்தை அவளை அழைத்து கொழுக்கட்டையும், சீடையும் தந்தார். மலர்க்கொடி ஆவலாக கொழுக்கட்டையை உண்டாள். நாளை அத்தை என்ன செய்து தருவார்கள்? என்று யோசிக்க ஆரம்பித்தாள். தோழிகளிடம் பூக்கள், பறவைகள் பெயர்களைச் சொல்லி விளையாட ஆரம்பித்தாள்.

மூன்றாம்நாள் வந்ததும், அத்தை சுட்டுக் கொண்டிருந்த சீய்யம் அவள் மூக்கைத் துளைக்கவே வேகமாக தோட்டத்திற்கு ஓடிச் சென்று பூக்களையும், பறவைகளையும் பார்த்து வந்தாள். உடனே மாமாவிடம் ஓடிவந்து கழுகு, மீன்கொத்தி, காடை என்றும், அல்லி, அரளி, செவ்வந்தி, சூரியகாந்தி என்றும் கூறி மாமாவிடம் நான்கு ரூபாய்கள் வாங்கிக் கொண்டாள். அத்தை தந்த சீய்யம், அப்பம், எள்ளுருண்டை, கடலையுருண்டை அனைத்தையும் நண்பர்களுக்கு வழங்கி மகிழ்ந்தாள்.

இப்பொழுது மலர்க்கொடி ஓய்வு நேரங்களில் கைபேசியைத் தொடுவதே இல்லை. பள்ளியை விட்டு வந்ததும் தோட்டத்திற்கு ஓடுகிறாள். மலர்க்கொடிக்கு இப்பொழுது கைபேசியுடன் விளையாடுவதை விட இயற்கையை நேசிப்பதில் ஆர்வம் வந்து விட்டது. பூக்களையும், பறவைகளையும் உற்றுப் பார்க்க ஆரம்பித்து விட்டாள். மாமா, அத்தை, பெற்றோர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

## உரையாடலாம் வாங்க!

கைபேசியினால் ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. கைபேசியுடன் விளையாடிக் கொண்டே இருந்தது ______________________

(அ) அத்தை (ஆ) மலர்க்கொடி (இ) தம்பி (ஈ) அப்பா

2. 'எள்ளுருண்டை' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

(அ) எள்ளு + உருண்டை (ஆ) எள் + உருண்டை

(இ) எல் + உருண்டை (ஈ) எல்லு + உருண்டை

3. 'விதம் + விதமாக' - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________

(அ) விதம்விதமாக (ஆ) விதமாக

(இ) விதவிதமாக (ஈ) விவாதமாக

4. 'மீன்கொத்தி' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________

(அ) மீ + கொத்தி (ஆ) மீன் + கொத்தி

(இ) மீண் + கொத்தி (ஈ) மின் + கொத்தி

5. 'வருத்தம்' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ________________________________

(அ) மகிழ்ச்சி (ஆ) பிரிந்து

(இ) சோர்வு (ஈ) சிறந்து

### வினாக்களுக்கு விடையளி.

1. கைபேசியில் மலர்க்கொடி பொழுது போக்கியது சரியா? ஏன்?
2. மலர்க்கொடியை மாற்றியது யார்?
3. மலர்க்கொடி காசுசேமிக்க அத்தை மாமாவிடம் செய்தது என்ன?
4. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதிக்கருத்து யாது?
5. மலர்க்கொடிக்கு மாமா காசு மற்றும் பலகாரம் பெற்றிட என்ன நிபந்தனை விதித்தார்?

### அகர முதலியைப் பார்த்து பொருள் அறிக.

1. பராமரித்தனர் - ________________________________

2. அயர்ந்து - ____________________________________

## விலங்குகளின் குட்டியை தேர்ந்தெடுப்போமா?

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| பறழ் | குஞ்சு | குரங்கு குட்டி | கன்று |
|  |  |  |  |
| பசு | குரங்கு | புலி | கோழி |

______________________ ______________________

______________________ ______________________

## ஏதாவது ஒரு எழுத்தை நீக்கி புதியசொல் உருவாக்கலாம் வாங்க.

எ.கா. மக்கள் - மகள்

1. கள்ளம் : ______________
2. பாயாசம் : ______________
3. கட்டடம் : ______________
4. சாளரம் : ______________
5. பதக்கம் : ______________
6. வாசகம் : ______________
7. தவிப்பு : ______________
8. குறட்டை : ______________
9. பண்டம் : ______________
10. வளையல் : ______________

**வினைமரபினை அறிந்து கொள்வோமா?**
**பொருத்தமானதை உரிய கோட்டில் எழுதுக.**



____________________________



____________________________



____________________________



____________________________



____________________________

( அம்பு எய்தார், பூ பறித்தாள், முறுக்கு தின்றான், மரம் வெட்டினான், சோறு உண்டான் )

## சொல் விளையாட்டு - படத்தைப் பார்த்து சரியான விடையை எழுதுக.



-----ண் ணா-----

| கடி தடு படி |
|---|



சிங்----- -----

| கம் நம் யம் |
|---|



நாற் ----- -----

| காலி டாலி வாலி |
|---|



தொலை----- காட்-----

| க்சி த்தி ப்பி |
|---|



பு----- ----- கம்

| த்த கம பக |
|---|



தட்-----

| டு டூ ட |
|---|



ம ----- ம்

| ரி ரு ர |
|---|



ஓட் ----- -----

| டம் தம் மம் |
|---|



பற --------

| மை தை வை |
|---|

## கலையும் கைவண்ணமும்

வண்ண நூலினைப் படத்தின் மேல் ஒட்டி வண்ணம் தீட்டி வரைக.



## அறிந்து கொள்வோம்

கைபேசியில் குழந்தைகள் விளையாடுவது பெரும் தீங்கு தரும்.

### சிந்திக்கலாமா?

உன் வீட்டுத்தோட்டத்தில் உள்ள மரத்தில் பறவையோ, அணிலோ கூடு கட்டினால் அதற்குத் தொல்லை தராமல் எவ்விதம் நடந்துகொள்ளலாம்? சிந்தித்து விடை கூறுக.

### செயல் திட்டம்

நாளிதழ்களில் வெளிவரும் விலங்குகளின் படங்களை ஒட்டிப் படத்தொகுப்பு ஒன்றினைத் தயார் செய்க.

3

# வீம்பால் வந்த விளைவு



புகளூர் என்ற ஊரில் ரவிக்குமார் என்ற வணிகன் இருந்தான். அவன் குதிரையில் தினமும் பல ஊர்களுக்கும் சென்று பொருட்களை வாங்கி விற்று வியாபாரம் செய்து வந்தான். ஒரு நாள் அன்றைய விற்பனையை முடித்துவிட்டுக் களைப்புடன் வந்த அவன், சற்று நேரம் ஓய்வெடுக்க ஆவல் கொண்டான். அந்த வழியிலிருந்த அடர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தினடியில் தன் குதிரையைக் கட்டிவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் கழித்து அவ்வழியே வீரன் ஒருவன் தனது குதிரையில் வேகமாக வந்தான். வெகுதூரம் குதிரையில் வந்ததால் வீரனும் தனது குதிரையுடன் அதே மரத்தடியில் ஓய்வெடுக்க வந்தான். அந்த வீரனிடம் ரவிக்குமார் "ஐயா! தங்கள் குதிரையை சற்று தள்ளிக் கட்டுங்கள் ஏனென்றால் என் குதிரை சற்று முரட்டுத்தனமானது" என்றான். அதற்கு அவ்வீரனோ, "முடியாது நான் இங்கு தான் கட்டுவேன், இந்த மரம் பொது" என்று வீம்பாகச் சொல்லிவிட்டு அங்கேயே அவன் குதிரையைக் கட்டிவிட்டு உணவு உண்ணச் சென்றான்.

வீரன் செயலை மறுத்துக் கூறமுடியாத ரவிக்குமார் மரத்தடியில் படுத்து கண் அயர்ந்துவிட்டான். வணிகனின் முரட்டுக்குதிரைக்கு அதன் அருகில் கட்டப்பட்டிருந்த வீரனின் குதிரையைப் பிடிக்கவில்லை. எனவே வீரனின் குதிரையை எட்டி உதைத்தது. இரண்டு குதிரைகளுக்கும் சண்டை மூண்டது. வணிகனின் முரட்டுக்குதிரை பலமாக உதைத்துத் தள்ளியதில் வீரனுடைய குதிரையின் கால் ஒன்று உடைந்து விட்டது. உணவு உண்டு முடித்த வீரன், தன் பயணத்தை தொடர விரைந்தான். தன் குதிரையின் கால் உடைந்துகிடப்பது கண்டு கோபம் கொண்டான். உறங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான். ''உன் குதிரை முரட்டுத்தனமாக எட்டி எட்டி உதைத்ததால் என் குதிரையின் கால் உடைந்துவிட்டது. எனவே அதற்கான நஷ்டஈடு கொடு'' என்று வணிகனிடம் கேட்டான். அதனை வணிகன் ஏற்றுக்கொள்ள மறுத்தான்.

''நான் உன் குதிரையைக் கட்டும்போதே ''என் குதிரை சற்று முரட்டுத்தனமானது, அதன் அருகில் கட்டவேண்டாம்'' என்று எச்சரித்தேன். நீ என்ன என்னைச் சொல்வதற்கு? நான் அங்குதான் என் குதிரையைக் கட்டுவேன் என்று வீம்பாகக் கட்டிவிட்டுச் சென்றாய். இப்போது குதிரைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் உன் குதிரையின் கால் உடைந்துவிட்டது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்று மறுத்துவிட்டான்.

''ஏய்! வணிகனே வா! நீதிபதியிடம் நியாயம் கேட்போம்'' என்றான் வீரன். இருவரும் நீதிபதியிடம் சென்றனர். வீரன் நீதிபதியிடம் நடந்தது என்னவென்று சொன்னான்.''வீரன் சொன்னதைக் கேட்ட நீதிபதி, வணிகனிடமும் என்ன நடந்தது?'' எனக் கேட்டார். வணிகனோ பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக நின்றான். ''வணிகன் ஊமை போல் இருக்கிறது, காதும் கேட்கவில்லையோ? பல முறை கேட்டும் பதில் சொல்லாமல் இருக்கிறானே,'' என்று கூறினார் நீதிபதி.

அதற்கு வீரன், ''அவன் பேசுவான், ஐயா. அவன் தான் என் குதிரை முரட்டுத்தனமானது; உன் குதிரையை அதன் அருகில் கட்டாதே, சிறிது தூரத்தில் கட்டு எனக் கூறினான். நானோ என் குதிரை வீரக்குதிரை என்று சொல்லி அவன் குதிரையின் அருகில் கட்டி வைத்தேன்'' என்று கூறி முடித்தான்.



வீரன் கூறியதைக் கேட்ட நீதிபதி, “வீரனே” வணிகன் எதுவும் கூறத் தேவையில்லை. நீயே உனது குற்றத்தை ஒப்புக்கொண்டாய். “வீம்புக்குணம் படைத்த உனக்கு வணிகன் எந்த வகையிலும் நஷ்டஈடு கொடுக்கத் தேவையில்லை” என்று தீர்ப்புக் கூறினார்.

நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டதும், வீம்புக்குணம் படைத்த வீரனின் முகத்தில் அசடு வழிந்தது. அதுவரை அமைதியாக இருந்த வணிகன் ஐயா, நீதிபதி அவர்களே! நான் மௌனமாய் இருந்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள். நடந்த உண்மையைப் புரிந்து கொண்டு நல்லதீர்ப்பு அளித்தீர்கள். மிகவும் நன்றி என்று கூறினான்.

**நீதிக் கருத்து :**

வீம்பு செய்தால் துன்பம் உண்டாகும்.

## உரையாடலாம் வாங்க!



வீம்பால் வந்த விளைவு கதையை உமது சொந்த நடையில் கூறுக.

பால் பண்ணையில் வரிசையில் நின்று, பால் வாங்கும்போது ஒருவன் இடையில் குறுக்கே வந்து பால் வாங்கினால் நீ என்ன செய்வாய்?

## வினாக்களுக்கு விடையளி.

1. வணிகன் எதில் சென்று வியாபாரம் செய்தான்?
2. வணிகன், வீரனிடம் என்ன கூறினான்?
3. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை என்ன செய்தது?
4. ‘வீம்பால் வந்த விளைவு’ - இக்கதையிலிருந்து நீ உணர்ந்து கொண்ட கருத்து யாது?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

எதிரிகளை வீழ்த்துவான்;
நாட்டைக் காப்பான். - அவன் யார்?



பந்தயத்தில் வேகமாய் ஓடிடுவான்;
பரிசுகள் பல வென்றிடுவான். - அவன் யார்?



நான் இல்லையென்றால்,
நீங்கள் யாரையும் பார்க்க முடியாது.
நான் யார்?



பெரிய தேரைத்தாங்கும், ஒரு சிறிய பையன்.
நான் யார்?



## மொழி விளையாட்டு

கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டுபிடித்து, வட்டமிட்டுப் பழங்களுக்குள் எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ | ணி | க | ன் | இ | உ | நீ |
| கி | ப | ம | ரு | வ | நூ | தி |
| த | ன் | கு | தி | ரை | ச் | ப |
| ஓ | கா | ல் | னி | தீ | செ | தி |
| ய் | வீ | ர | ன் | மி | ல் | தை |
| வு | கு | ண | ம் | து | ங் | வ் |




## மீண்டும் மீண்டும் ஒலிப்போமா?

1. மலையில் பழுத்த பழம் குலை குலையாய்த் தொங்குது
2. வாழைப்பழத்தோலில் நடந்து வழுக்கி விழுந்தேன்; கீழே பார்த்தேன் ‘வழவழ’ ன்னு தரை இருந்தது
3. அழுத குழந்தை புரளுது. ஆளுக பார்த்தால் விழுதப் பிடிச்சு ஊஞ்சலாடுது

## விடுபட்ட சொற்களைப் படத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு நிரப்புக.

1. வணிகன் __________________அயர்ந்துவிட்டான்.
2. _________________ குணம் படைத்த உனக்கு நஷ்டஈடு கொடுக்கத் தேவையில்லை.
3. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை ------------------- உதைத்துத் தள்ளிவிட்டது.
4. வணிகன், வியாபாரம் செய்துவிட்டு _________________ எடுக்க நினைத்தான்.
5. வீரனுடைய குதிரையின் _________________ உடைந்துவிட்டது.



## கலையும் கைவண்ணமும்

### வண்ணமிட்டு மகிழ்க.



கட்டத்தில் உள்ள மூலிகைச் செடிகளின் பெயர்களை வட்டமிட்டு எடுத்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ப | க | சி | து | ள | சி |
| ம | க | ர | ம் | ஓ | ம | ம் |
| ழ | ப | க | ற் | றா | ழை | இ |
| வே | னா | சு | பு | தி | னா | ம |
| ப் | கீ | ரை | மு | ட | க் | ரு |
| பி | வெ | ந் | த | ய | ம் | த |
| லை | பூ | ண் | டு | க் | பு | ம் |
| மு | ட | க் | க | த் | தா | ன் |
| தூ | வ | ல் | லா | ரை | கீ | ரை |
| து | நெ | ல் | லி | கீ | ழா | ரை |
| வ | நி | ல | ஆ | வா | ரை | ம |
| ளை | ப | வெ | ற் | றி | லை | சு |

1. கற்றாழை
2. ____________________________
3. ____________________________
4. ____________________________
5. ____________________________
6. ____________________________
7. ____________________________
8. ____________________________
9. ____________________________
10. ____________________________
11. ____________________________
12. ____________________________

**சிந்திக்கலாமா?**



ராதா, தின்பண்டம் வாங்கிச் சாப்பிட தன் பெற்றோரிடமும் தினமும் பணம் கேட்பாள். தராவிட்டாலும் அடம்பிடித்து வாங்கிவிடுவாள்.

ரவி, பெற்றோர் வாங்கித் தந்தால் மட்டுமே தின்பண்டம் சாப்பிடுவான்.

## எதிலிருந்து எதைப் பெறுவோம் என்பதை விடுபட்ட இடத்தில் நிரப்புக













| மரம் | கொடி | செடி |
|---|---|---|
| ------------------------ | ------------------------ | ------------------------ |
| ------------------------ | ------------------------ | ------------------------ |
| ------------------------ | ------------------------ | ------------------------ |

# உயர்திணையும் அஃறிணையும்

## திணை

திணை என்றால் ஒழுக்கம் அல்லது இனம் என்று பொருள். உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் திணையின் அடிப்படையில் பகுக்க முடியும். இந்தத் திணையைத் தமிழ் இலக்கணநூலார் இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர்.

1. உயர்திணை - உயர்ந்த ஒழுக்கம் கொண்டவை.
2. அஃறிணை - அல் + திணை - உயர்திணை அல்லாதவை.

## உயர்திணை

பகுத்தறிவு உள்ள மனிதர்களையும் தேவர்களையும் நரகர்களையும் குறிக்கும். ( பகுத்தறிவு என்பது சிந்திக்கும் திறன்) .

எ.கா.

அரசர், நரகர், தேவர், மக்கள்.

மக்கள் எனப்படுவது பெண்கள் மற்றும் ஆண்கள்.

## அஃறிணை

அல் + திணை எனப் பிரிக்க உயர்திணை அல்லாதவை எனப் பொருள் காணலாம். பகுத்தறிவற்ற உயிர்களும் உயிரற்றனவும் அஃறிணை ஆகும்.

மக்கள், தேவர், நரகர் அல்லாத மற்றவை.

( மிருகங்கள், தாவரங்கள், பொருள்கள் )

எ.கா.

எருது, மாமரம், வில், கத்தரிக்காய், காகம் இவை அஃறிணையாகும்.

கயல்விழி : அம்மா! அம்மா! இங்க வாங்க. அங்கே பாருங்கம்மா. ஒரு காகம் மின்கம்பியில் தலைகீழாகத் தொங்குகிறது.

அம்மா : ஐயோ! பாவம். அது மின்சாரம் தாக்கி இறந்து விட்டது.

கயல்விழி : ஏன்? அதற்குக் கண்ணில்லையா?. மின்கம்பத்தில் அமர்ந்தால் உயிருக்கு ஆபத்து என்று தெரியாதா?



அம்மா : இல்லையே! மிருகங்களுக்கு மனிதர்களைப் போல் பகுத்தறியும் திறன் இல்லை. எனவே அவைகள் அஃறிணை எனப்படுகிறது. சிந்திக்கும் திறனில்லாத உயிருள்ள மாடு, பறவை, மரம், செடி கொடிகள் மற்றும் நாம் பயன்படுத்தும் உயிரற்ற நாற்காலி, கட்டில், சன்னல்கள் போன்ற மரச்சாமான்கள் வீட்டுச்சமையல் சாமான்களும் அஃறிணையே.

கயல்விழி : பூ, காய், இலை போன்றவைகளும் அஃறிணையா?

அம்மா : ஆமாம் கயல். அது மட்டுமின்றி மலை, அருவி, ஆறு, கடல், கல், மண் இவைகளும் அஃறிணையே.

எது உயர்திணை? எது அஃறிணை? பிரித்து அறிவோமா?

| | | | | |
|---|---|---|---|---|
| குரு | குயில் | மரம் | இராமன் | குடம் |
| சிலை | கடவுள் | தாய் | யானை | சட்டை |
| நாற்காலி | பேனா | பசு | புறா | தேனீ |
| முனிவர் | தந்தை | தாத்தா | சூரியன் | நிலா |



உயர்திணை

அஃறிணை



## செயல் திட்டம்

உங்கள் வீட்டில் நீங்கள் காணும் பொருள்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்தி எழுதி வருக.

# 4 மழைநீர்

மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலவே
உயர்வாய் எண்ண வேண்டுமே !

பொன்னும் பொருளும் கூடவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே !

மனிதர் பறவை விலங்குமே
மகிழ்ந்து வாழத்தேவையே
இனிவரும் காலம் யாவுமே
இல்லத்தில் நீரைச் சேர்ப்பமே!

குளங்கள் ஏரி நிரம்புமே
குருவி கொக்கும் வாழுமே
வானின் அமுதம் சேமித்தே
வாழ்வைச் செம்மை செய்வமே !

நாடும் வீடும் செழிக்கவே
நல்ல தண்ணீர் வேண்டுமே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்பமே !

உழவும் தொழிலும் ஓங்கவே
உற்ற துணை மழையாகுமே
வளமும் நலமும் நிறைந்திட
வணங்கி மழையைப் போற்றுவமே !



## உரையாடலாம் வாங்க!



பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.

மழை பற்றி ஏற்கெனவே நீ அறிந்த பாடலைப் பாடி மகிழ்க.

மழை உனக்கு எவ்வளவு பிடிக்கும் என்று உம் சொந்த நடையில் பேசுக.

### ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக

| செல்லுதே | ஓடியே | போலவே | வேண்டுமே |
|---|---|---|---|
| ________ | ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ | ________ |

### முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

பொன்னும், பொழியும் ________________

________________ ________________

________________ ________________

________________ ________________

### இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

மனிதர், இனிவரும்

________________ ________________

________________ ________________

________________ ________________

### அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1) பொழியும் - ________________ 3) செம்மை - ________________

2) ஓங்குதல் - ________________ 4) இல்லம் - ________________

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. 'தேக்குதல்' - என்ற சொல்லின் எதிர்ச்சொல் ______________________

(அ) நீக்குதல் (ஆ) தெளிதல்

(இ) சேமித்தல் (ஈ) பாதுகாத்தல்

2. 'வானின் அமுதம்' - இச்சொல் குறிப்பது ______________________

(அ) அமிழ்தம் (ஆ) அமிர்தம்

(இ) சோறு (ஈ) மழைநீர்

3. 'மழையாகுமே' - இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ______________

(அ) மழை + யாகுமே (ஆ) மழையாய் + யாகுமே

(இ) மழை + ஆகுமே (ஈ) மழையாய் + ஆகுமே

4. 'நினைத்தல்' - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் __________________

(அ) கூறுதல் (ஆ) எண்ணுதல்

(இ) மறத்தல் (ஈ) நனைத்தல்

### "பொன்னும் பொருளும்" இதுபோன்று "உம்" சேர்ந்து வரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

## இணைந்து செய்வோம்

### பொருத்துவோமா?

| | |
|---|---|
| 1. நாடு வீடும் | வேண்டும் |
| 2. வளமும் நலமும் | சேர்ப்போம் |
| 3. இல்லத்தின் நீரை | மழையாகுமே |
| 4. உற்ற துணை | செழிக்கவே |
| 5. உயிராய் எண்ண | நிலைத்திட |

### சிந்திக்கலாமா?



மழை பொழியும் போது மழைநீரைப் பாத்திரங்களில் பிடித்து வைக்கச் சொல்வார் மான்விழியின் அம்மா. ஆனால், மான்விழியோ ஓடும் நீரில் கப்பல் செய்து விளையாடியபடியே இருப்பாள். மழைநீரைச் சேமிக்கச் சொல்லி, மான்விழியின் அம்மா ஏன் கூறுகிறார்?

## கலையும் கைவண்ணமும்

### தேவையான பொருள்கள்

மண் குவளை அல்லது மின்னட்டை
வண்ணக்குழம்பு - பல நிறம்
தண்ணீர் வாளி

முக்கால் பாகம் நீர் நிரம்பிய வாளியில் வண்ணக் குழம்புகளைத் தேவையான அளவு சேர்க்க வேண்டும். (விரும்பிய வண்ணங்கள் ஒவ்வொரு மூடி) அந்த வண்ணக் குழம்பை, ஒரு குச்சியால் கலக்க வேண்டும். அதில், குவளை அல்லது மின்னட்டையை மூழ்கச் செய்து எடுக்க வேண்டும். இப்போது, அழகான வண்ணங்களுடன் கூடிய குவளையைக் கண்டு மகிழலாம்.

## சொல்லக் கேட்டு எழுதுக

1. மழைநீர் 2. வெள்ளம் 3. குளங்கள் 4. தண்ணீர்

5. கொடை 6. வியர்வை 7. ஓங்குதல் 8. போற்றுவோம்

## இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் படித்துப் பார்ப்போம். விடுபட்ட இடத்தை நிரப்பி மகிழ்வோம்

| | |
|---|---|
| தேருவருதே | வி ____ வி |
| சிவா வாசி | மா____ மா |
| வா தாத்தா வா | த ____ த |
| மாடு ஓடுமா | தே ____ தே |
| விகடகவி | மே ____ மே |
| துவளுவது | க _____ க |



### செயல் திட்டம்

உனது வீட்டில் மழைநீர் சேகரிப்புத் திட்ட அமைப்பு உள்ளதா! இல்லையெனில் பெற்றோரை அமைத்துத் தரச் சொல்லி வலியுறுத்துங்கள்.

# 5 காகமும் நாகமும்


ஒரு ஆலமரத்தில் காகம் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. மரத்தின் கீழே உள்ள புற்றில் பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தது.
தன் கூட்டில் முட்டையிட்டப்பின் காகம் தினந்தோறும் இரை தேடச் சென்றது.
காகம் சென்ற பின் புற்றில் உள்ள பாம்பு மரத்தில் ஏறி முட்டையை உடைத்து குடித்தது.
திரும்பி வந்த காகம் கூட்டில் தன் முட்டை உடைந்து கிடப்பது கண்டு வருந்தியது.
அருகில் வாழ்ந்த தன் நண்பன் நரியிடம் நடந்ததைக் கூறி கதறியது.
நண்பா! அக் கொடிய பாம்பைக் கொல்வதற்கு ஒரு வழி சொல் என்றது.
அரண்மனைக் குளத்தில் இளவரசி குளிக்கும் பொழுது, தன் நகைகளை கழற்றி வைப்பார். அதில் ஒன்றை கவர்ந்து வந்து பாம்பு புற்றில் போடு என்றது.


சரி! நீ சொன்னபடியே கொண்டுவந்து போடுகிறேன் அப்படிப் போட்டால் என்ன நடக்கும்?
முதலில் நகையைப் போடு. அப்புறம் நடப்பதைப் பார்.
அரண்மனைக் குளக்கரையில் காகம் காத்திருந்தது. குளத்தில் நீராடிய இளவரசி, தன் முத்துமாலையைக் கரையில் கழற்றி வைத்தார்.
அதற்காகவே காத்திருந்த காகம் முத்துமாலையை கவர்ந்து சென்றது.
யாரங்கே? ... காவலர்களே பிடியுங்கள் அந்தக் காகத்தை. என் முத்துமாலையைக் கவர்ந்து செல்கிறது.
காவலர்கள் வேல்களுடன் காகத்தைப் பின் தொடர்ந்து ஓடினர்.




**நீதிக் கருத்து : பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்தல்**

## உரையாடலாம் வாங்க!



பாம்பு காகத்தின் முட்டைகளை உடைத்தது சரியா? கலந்துரையாடுக.

“காகமும் நாகமும்” கதையை உமது சொந்த நடையில் கூறுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. காகம் ______________________________ வாழும்.

(அ) கூட்டில் (ஆ) வீட்டில்
(இ) புற்றில் (ஈ) மண்ணில்

2. ‘நண்பர்கள்’ இச்சொல்லின் எதிர்ச்சொல் ______________________________

(அ) அன்பானவர்கள் (ஆ) உறவினர்கள்
(இ) பகைவர்கள் (ஈ) நெருங்கியவர்கள்

3. ‘முத்துமாலை’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

(அ) முத்து + மாலை (ஆ) முத்தும் + மாலை
(இ) முத்தும் + ஆலை (ஈ) முத்து + மலை

4. ‘மரம் + பொந்து’ - இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

(அ) மரம்பொந்து (ஆ) மரப்பொந்து
(இ) மரப்பந்து (ஈ) மரபொந்து

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. காகத்தின் முட்டைகளைப் பாம்பு என்ன செய்தது?
2. பாம்பை அழிப்பதற்காகக் காகம் யாரிடம் ஆலோசனை கேட்டது?
3. “காகமும் நாகமும்” கதை உணர்த்தும் நீதி என்ன?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

நன்றிக்கு வால்; கோபத்துக்கு வாய் ...
அது என்ன?



தலை போனால் மறைக்கும்; இடைபோனால் குரைக்கும்;
மூன்றும் ஒன்று சேர்ந்தால் முந்தி ஓட்டம் பிடிக்கும்...
அது என்ன?



பிறக்கும் போது வால் உண்டு;
இறக்கும்போது வால் இல்லை... அது என்ன?



## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக.

1. மாலையை முத்து காகம் காத்திருந்த சென்றது கவர்ந்து

----------------------------------------------------------------------------

2. கொல்வதற்கு வழி ஒரு சொல் பாம்பை

----------------------------------------------------------------------------

3. மகிழ்ச்சியாக காலம் நீண்ட காகம் வாழ்ந்தது

----------------------------------------------------------------------------

## எந்த உயிரினத்திற்கு என்ன பண்பு?

| உயிரினம் | பண்பு |
|---|---|
|  | ஒற்றுமை |
|  | சுறுசுறுப்பு |
|  | கூட்டமாக வாழும் |
|  | நன்றியுணர்வு |

## மொழி விளையாட்டு

சொல்லின் முதல் மற்றும் கடைசி எழுத்துகளை நிரப்புங்கள். இரண்டும் ஒரே எழுத்து தான். கண்டுபிடிப்போமா?

எ.கா. கு று கு

_____ த் _____     _____ லுங் _____

_____ ரங் _____     _____ த _____

_____ ளிப் _____     _____ டிபு _____

_____ றுக் _____     _____ ற் _____

_____ ப் _____     _____ ன _____

## பெயர் எது? செயல் எது?

| | பெயர் | செயல் |
|---|---|---|
| 1. குதிரை வேகமாக ஓடியது | -------------------- | -------------------- |
| 2. ஆசிரியர் பாடம் நடத்தினார் | -------------------- | -------------------- |
| 3. குழந்தை சிரித்தது | -------------------- | -------------------- |

## கலையும் கைவண்ணமும்



### செயல் திட்டம்

பறவை இறகுகளைச் சேகரித்து வா.

முத்துமாலை படம் வரைந்து வண்ணம் தீட்டி வா

# 6 நல்வழி



ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளும்அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து.

### பாடல் பொருள்

ஆற்றில் பெருகி ஓடும் நீரானது வற்றிவிட்டால் வறண்ட மணற்பகுதி சூரிய வெப்பத்தால் சூடேறிவிடும். அம்மணலில் நடப்பவரின் பாதங்களைச் சுடும். அந்த நிலையிலும் அந்த மணலைத் தோண்டுகின்றபோது சுரக்கின்ற நீர் ஊற்றானது உலகமக்களுக்கு நல்லஉணவாகும். அதுபோலவே உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், வறுமையில் வாடினாலும் உதவி என்று வந்தவர்க்கு இல்லையென்று கூறாது, தம்மால் இயன்றவரை கொடுத்து உதவுவர்.

### ஆசிரியர்குறிப்பு

இந்நூலை இயற்றியவர் ஔவையார். இந்நூல் கடவுள்வாழ்த்தோடு மொத்தம் நாற்பத்தி ஒன்று வெண்பாக்களைக் கொண்டது. நம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிகளைக் கூறுவதால் இது நல்வழி எனப்படுகிறது.

## உரையாடலாம் வாங்க!



உங்களிடம் ஒரு பழம் தான் இருக்கிறது. உங்கள் தம்பியும் தங்கையும் அந்தப் பழம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குப் பழத்தைப் பிரித்துக் கொடுப்பீர்களா? நீங்களே எடுத்துக் கொள்வீர்களா? உங்கள் கருத்தைக் கூறுக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. 'உலகூட்டும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________________

(அ) உல + கூட்டும் (ஆ) உலகு + கூட்டும்

(இ) உலகு + ஊட்டும் (ஈ) உலகூட்டு + உம்

2. 'அந்நாளும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________________

(அ) அந் + நாளும் (ஆ) அ + நாளும்

(இ) அந்நா + ளும் (ஈ) அந்த + நாளும்

3. 'இசைந்து' இச்சொல்லின் பொருள் ____________________

(அ) மறுத்து (ஆ) பாடி

(இ) ஒப்புக்கொண்டு (ஈ) உதவி

### இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக

1. ஆற்று - ஊற்று

2. ________________________________

3. ________________________________

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஊற்று நீரைக் கொடுப்பது எது?
2. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?
3. நல்லகுடிப் பிறந்தாரின் இயல்பு எத்தகையது?

## பாடலை நிறைவு செய்க

| | | |
|---|---|---|
| ஆற்று | நீரில் | துள்ளியே |
| அழகாய் | நீந்தும் | மீன்களே |
| -------------- | -------------- | -------------- |
| -------------- | -------------- | -------------- |
| -------------- | -------------- | -------------- |
| -------------- | -------------- | -------------- |

## கலையும் கைவண்ணமும்



## பொருத்துக

| | |
|---|---|
| நல்ல | மனம் |
| ஆற்று | குணம் |
| மணல் | நீர் |
| உதவும் | வீடு |

## மொழி விளையாட்டு

**இரண்டு சொற்களுக்கும் பொதுவான எழுத்தைக் கண்டுபிடி.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க | | | ப | | | பா | | | தி | |
| வி | ழு | து | வ | [ ] | று | க | [ ] | ல் | கு | [ ] | ழ் |
| | தை | | | ர் | | | ம் | | | ர் | |
| | அ | | | க | | | க | | | க | |
| நா | [ ] | கு | வி | [ ] | றி | கு | [ ] | ர் | ந | [ ] | றி |
| | கா | | | வு | | | று | | | று | |
| | கு | | | தொ | | | | | | | |
| உ | [ ] | வு | த | [ ] | கை | | | | | | |
| | ம் | | | கு | | | | | | | |

### சிந்திக்கலாமா?



ஒருவர் செல்வம் படைத்தவராயிருந்தும் பிறர்க்கு உதவாமல் இருப்பதாக நீங்கள் அறிகிறீர்கள். உதவுவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அவருக்கு எப்படி எடுத்துச் சொல்லலாம்?

## அறிந்து கொள்வோம்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

- திருக்குறள்

ஐயம் இட்டு உண் - ஆத்திசூடி

**வண்ண எழுத்துகளைக் கொண்ட வார்த்தைகளுக்கு எதிர்ச்சொல் எழுதுவோம்**

1. பகலில் விழித்து ________________________________________ உறங்கிடு.

2. காலையில் படி! ________________________________________ விளையாடு.

3. மெய்யைப் பேசி ________________________________________ நீக்கிடு.

4. காய் எனில் காத்திரு ______________________________ எனில் சுவைத்திடு.

5. சிறுக சேமித்துப் ________________________________________ வாழ்ந்திடு.

## பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுப்போமா?

1. சாப்பிடத் தோன்றும்___________ வீரம் என்பது___________ (பலம் / பழம்)
2. சிறுவர்கள் விளையாடுவது___________வீட்டில் வளர்ப்பது______________ (கோழி / கோலி)
3. பந்தை நீயும்___________ அடுப்பை ஊதி ஊதி_____________ (எரி / எறி)
4. சுவரில் அடிப்பது ___________ தமிழ் மாதங்களில் ஒன்று______________ (ஆனி / ஆணி)
5. விறகை எரித்தால்_________ வீட்டில் சமைப்பது___________ (கரி / கறி)
6. கதிரவன் உதிப்பது _____________ வீரத்தால் அடக்குவது ______________ (காளை / காலை)
7. பசுவுக்கு இருப்பது ______________ படை வீரனிடம் இருப்பது ___________ (வாள் / வால்)
8. மார்கழியில் பெய்வது ____________ மனிதர்கள் செய்வது. ________________ (பணி / பனி)
9. பதுங்கிப் பாய்வது__________ புளிப்புச் சுவைக்கு___________ (புலி / புளி)

## வேறுபட்ட வண்ணத்தில் உள்ள எழுத்துகளைச் சேர்த்தால் கிடைக்கும் ஆடை வகைகளை எழுதுக.

பள்ளம் அரும்பு பார்த்திபன் ஆர்த்தி ______________________

பருந்து வட்டம் கசடு ______________________

கம்பு பம்பரம் அப்பம் தக்காளி ______________________

# 7 தமிழ்மொழியின் பெருமை

அமிழ்தினும் இனிய மொழியாகிய நம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. உலக மொழிகளுள் மிகுந்த அழகும், நீடித்த இனிமையும், தேனினும் இனிய சுவையும் கொண்டது. எனவே தான் மகாகவி பாரதியார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடியுள்ளார். மேலும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

எனத் தமிழ் மொழியைப் போற்றிப் புகழ்கின்றார்.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இணைந்தது முத்தமிழ்.

எழுத்து நடை வாயிலாக வெளிப்படுவது இயல், பாடல்கள் மூலம் வெளிப்படுவது இசை, அங்கங்களை அசைத்து வெளிப்படுத்துவது நாடகம் என தமிழ் முத்தமிழாகும்



சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வின் போது கண்டறிந்த மண்பாண்டங்கள், ஆடை அணிகலன்கள், கட்டிட அமைப்புகள் போன்ற தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் மூலம் தமிழ்மொழி "ஆதித்தமிழர்மொழி" என்பது புலப்படுகிறது.

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்னும் கணியன் பூங்குன்றனாரால் எழுதப்பட்ட புறநானூற்றுப்பாடல் இன்றளவிலும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்து தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்துகிறது.

இன்று நம் தமிழ்மொழி உலகில் உயர்தமிழ்ச் செம்மொழியாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திணை, துறை, பாகுபாட்டோடு எழுத்துக்கும், சொல்லுக்கும் இலக்கணம் படைத்தது, தொல்காப்பியம். அகம், புறம் எனப் பிரித்து வாழ்வுக்கும் பொருள் சொல்லிப் பொருளதிகாரம் கண்டது.

தமிழர்களின் ஏறுதழுவுதல் போன்ற வீர விளையாட்டுகளை விளக்கும் பாறைஓவியங்கள், கல்வெட்டுகளில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள், இலக்கியங்கள் குறிப்பிடும் பண்பாடு, விருந்தோம்பல் முதலான பண்புகள் பழங்காலத் தமிழர்களின் பெருமையினை தெளிவாக்குகின்றன.

“தமிழனென்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா”

என்னும் பாடல்வரிகள் தமிழர்களின் பெருமைக்குச் சான்று கூறுகின்றன. உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு போற்றிப் புகழும் “உலகப்பொதுமறை” திருக்குறள் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளைக் கூறுகின்றன.

தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களின் சிறப்புகளை அறிந்த அயல்நாட்டினர் தமிழ்மொழியை கற்றறிந்ததோடு தமிழில் நல்ல நூல்களை இயற்றியுள்ளனர். தமிழிலுள்ள அறநூல்களை பிறமொழிகளில் மொழிபெயர்த்து உலகமெல்லாம் தமிழ் மணக்கச் செய்துள்ளனர். ஜி.யு.போப், வீரமாமுனிவர், கால்டுவெல் போன்ற அயல்நாட்டு அறிஞர்கள் தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர்.

நம் செம்மொழியாம் தமிழ்மொழி காலத்திற்கேற்ப வளர்ந்து மாற்றங்களுக்குள்ளாகி உலகம் முழுவதும் பரவி வருகிறது. தமிழ்ப்பண்பாடு உலகளாவிய பெருமை மிக்கது. அத்தகைய “தேமதுரத் தமிழ்ஓசை உலகமெல்லாம் பரவும் வகை செய்திடல் வேண்டும்”.

## உரையாடலாம் வாங்க!

தமிழின் இனிமையைப் பாரதியார் எப்படியெல்லாம் புகழ்கிறார்? கலந்துரையாடுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. 'தமிழுக்கு அமுது என்று பேர்' என்று பாடியவர்_________________________________.

(அ) பாரதியார் (ஆ) கண்ணதாசன்

(இ) கவிமணி (ஈ) பாரதிதாசன்

2. 'செம்மை + மொழி' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது__________.

(அ) செம்மொழி (ஆ) செம்மொலி

(இ) செம்மொளி (ஈ) செமொழி

3. 'கீழடி' அகழாய்வு நடந்த மாவட்டம் ___________________________________________

(அ) புதுக்கோட்டை (ஆ) தருமபுரி

(இ) சிவகங்கை (ஈ) திருச்சி

4. 'ஆதித்தமிழர்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது__________________

(அ) ஆதி + தமிழர் (ஆ) ஆதி + தமிளர்

(இ) அதி + தமிழர் (ஈ) ஆதீ + தமிழர்

5. 'பொலிவு' - இச்சொல்லுக்குரிய பொருள் _____________________________________.

(அ) மெலிவு (ஆ) அழகு

(இ) துணிவு (ஈ) சிறப்பு

## சரியான தொடரை ✓ எனவும் தவறான தொடரை ✗ எனவும் குறியிடுக.

1. இயல், இசை, நாடகம் ஆகியன தமிழின் பெருமையை வெளிப்படுத்தின. [ ]
2. தமிழ்மொழி ஆதித்தமிழர் மொழி இல்லை. [ ]
3. வீரம் தமிழரின் பண்புகளுள் ஒன்று. [ ]
4. யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்னும் தொடர் ஆத்திசூடியில் உள்ளது. [ ]
5. சிவகங்கையிலுள்ள கீழடியில் அகழாய்வு நடைபெறவில்லை. [ ]

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

தொன்மை - ----------------------------------------

அமிழ்தினும் - ----------------------------------------

ஆபரணம் - ----------------------------------------

செம்மொழி - ----------------------------------------

பறைசாற்றும் - ----------------------------------------

## மொழி விளையாட்டு

**சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்துச் சொல்லை முழுமையடையச் செய்க.**

| | |
|---|---|
| இ ☐ சை — கை, சை, நை | நா ☐ க ம் — ப, ள, ட |
| பா ☐ — ரை, றை, நை | ☐ ழ டி — நீ, சீ, கீ |

## வினாக்களுக்கு விடையளிக்க

1. தமிழ்மொழியின் பெருமைகளுள் இரண்டு எழுதுக.
2. கீழடி அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் யாவை?
3. தமிழரின் பெருமையைக் கணியன் பூங்குன்றனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
4. தமிழ்மொழி செம்மொழி என்று ஏன் அழைக்கப்படுகிறது?
5. தமிழ்மொழி பற்றி நீவிர் அறிந்த கருத்தை எழுதுக.

## பழத்திற்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிவு செய்து, சொற்றொடர் உருவாக்குக.

1) இயல் என்பது 

நடை

இயல் என்பது எழுத்து நடை

2) பாறை ஓவியங்களில் தமிழர்களின் 

விளையாட்டுகள் பற்றிய செய்திகள் உள்ளன.

3) பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால் தமிழ்மொழி 

ஆகும்.

4) நடுவண் அரசு 

ஆம் ஆண்டு தமிழைச் செம்மொழி என அறிவித்தது.

சிந்திக்கலாமா?

இனியன் தன் நண்பர்களிடம் “பிறமொழிகள் கற்பதிலேயே, ஆர்வம் காட்டுவேன்,” என்று கூறுகிறான்.

வீணா தன் தோழிகளிடம் “பிறமொழிகளையும் கற்பேன்; தமிழ்மொழிக்கு முதலிடம் தருவேன்; ஏனெனில் தாய்மொழியே சிந்திக்கும் திறனை வளர்க்கும்,” என்கிறாள்.

**இனியன், வீணா இவர்களின் பேச்சிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வது என்ன?**

## அறிந்து கொள்வோம்

லிங்குவா என்பது இலத்தின் மொழிச் சொல் இச்சொல் மூலம் லாங்கவேஜ் என்ற சொல் தோன்றியது. இதனைத் தமிழில் நாம் மொழி என அழைக்கிறோம்.

## செயல் திட்டம்

- தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்வி பற்றிய செய்திகளைத் தொகுத்து வருக.
- உன் சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதி வருக.

## 8 அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள்



மாலைப்பொழுதில் ஒரு நாள் மலர்க்கொடியும், செங்கமலமும் பள்ளி விட்டு வீடு திரும்பினர். அப்பொழுது திடீரென்று பேரிரைச்சல் தலைக்கு மேல் கேட்டது. வானத்தை அண்ணாந்து பார்த்த பொழுது, ஒரு விமானம் பறந்து சென்று கொண்டிருந்தது. கருமேகங்கள் சூழ்ந்திருந்த வானத்தில் பேரொலியுடன் இடி இடித்தது. சோ! என்று மழை பெய்யத் தொடங்கியது.

மலர்க்கொடி : திடீரென்று மழை பெய்கிறதே. நாம் முழுதும் நனைந்து விடுவோமோ? அதோ! அந்த கட்டடத்தின் அடியில் சிறிது நேரம் தாமதிப்போம். மழை நின்றதும் வீட்டிற்குச் செல்வோம்.

செங்கமலம் : சரி! மழைக்கு நாம் இங்கே ஒதுங்கிக் கொள்கிறோம். மேலே பறக்கும் விமானம் என்ன செய்யும்? கருமேகங்கள் வழியை மறிக்காதா?

மலர்க்கொடி : நிச்சயமாக இல்லை. ஏனென்றால் விமானம் கருமேகங்களையும் தாண்டி உயரமாக பறக்கக்கூடியது.

செங்கமலம் : அதை நீ எப்படி அறிவாய்?

மலர்க்கொடி : தொலைக்காட்சி வாயிலாக நான் அறிவேன். விமானம் வெகுஉயரத்தில் பறக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேகமூட்டம், புயல், இடி, மழை போன்றவற்றால் அதன் பயணம் பாதிக்கப்படுவதில்லை என்பதை குறும்படம் மூலம் விளக்கியதை அறிவேன்.

செங்கமலம் : கேட்பதற்கே மிகவும் வியப்பாக உள்ளது. தொலைக் காட்சியில் இது பற்றியெல்லாமா சொல்கிறார்கள் ..? வேறு என்னென்னவெல்லாம் நீ தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறாய்? வா! மழை தூரலாகத் தானே பெய்கிறது. நாம் பேசிக்கொண்டே செல்வோம்.

மலர்க்கொடி : இன்னும் மழை ஓயவில்லை. இடி இடிப்பதும் நிற்கவில்லை. சிறிது நேரம் கழித்துச் செல்வோமா?

செங்கமலம் : அதனால் என்ன? மழை கனமாகப் பெய்தால் மறுபடியும் ஒதுங்கினால் போயிற்று.



மலர்க்கொடி : இடி இடித்து மழை பெய்யும் போது மரத்தடியில் நின்றால் இடிதாக்கி உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுவதை நான் தொலைக்காட்சி செய்தியில் பார்த்திருக்கிறேன்.

செங்கமலம் : ஓ! சரி! சரி! வேறு என்னென்னவெல்லாம் நீ தொலைக் காட்சியில் பார்த்திருக்கிறாய்?

மலர்க்கொடி : உலகளவில் நடக்கும் விளையாட்டுப்போட்டிகள், பொம்மைப்படங்கள், கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், நாடகத்தொடர்கள், விஞ்ஞானத்தின் விந்தைமிகு கண்டுபிடிப்புகள், மாநிலச்செய்திகள், உலகச்செய்திகள் என உலகில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் ஒளிபரப்புகிறார்கள்.

செங்கமலம் : மிகவும் ஆச்சரியமாக உள்ளதே! நான் ஏதோ பொழுதுபோக்கிற்காக தொலைக்காட்சி பயன்படுகிறது என்று நினைத்தேன். நீ சொல்வதைப் பார்த்தால் தொலைக்காட்சி உலக நிகழ்வுகள் அனைத்தையும் தினமும் நமக்குத் தெரிவிக்கும், உலகில் பலராலும் பாராட்டப்படும் சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாகும்.

மலர்க்கொடி : மகிழ்ச்சி! இனி தினந்தோறும் தொலைக்காட்சியில் நாம் கண்டு மகிழும் நல்ல பல நிகழ்ச்சிகளையெல்லாம் நம் தோழிகளுடன் பேசி மகிழ்வோம்! வா! மழை நின்று விட்டது. அவரவர் வீட்டுக்குச் செல்வோம்.

## உரையாடலாம் வாங்க!



தொலைக்காட்சி, நம் கண்ணுக்கும் காதுக்கும் மட்டுமல்ல, அறிவுக்கும் விருந்தளிக்கும் என்பதைப் பிறருக்கு நீங்கள் எப்படி உணர்த்துவீர்கள்?

## சரியான விடைடையைத் தேர்வு செய்வோமா?

1. விமானம் பறப்பது பற்றிய செய்தியை ___________ வாயிலாக மலர்க்கொடி அறிந்து கொண்டாள்.

(அ) கணினி (ஆ) தொலைக்காட்சி

(இ) வானொலி (ஈ) அலைபேசி

2. 'ஆர்வம்' - இச்சொல்லின் பொருள் ___________

(அ) வெறுப்பு (ஆ) மறுப்பு

(இ) மகிழ்ச்சி (ஈ) விருப்பம்

3. 'உயரம்' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ___________

(அ) குட்டை (ஆ) நீளம்

(இ) நெட்டை (ஈ) நீண்ட

4. 'தொலைக்காட்சி' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

(அ) தொலை + காட்சி (ஆ) தொல்லை + காட்சி

(இ) தொலைவு + காட்சி (ஈ) தொல் + காட்சி

5. 'குறுமை + படம்' - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________

(அ) குறுபடம் (ஆ) குறுமைபடம்

(இ) குறும்படம் (ஈ) குறுகியபடம்

### வினாக்களுக்கு விடையளிக்க

1. மலர்க்கொடியும், செங்கமலமும் வானத்தில் எதைக் கண்டனர்?
2. வானில் பறக்கும் விமானம் எதனால் பாதிக்கப்படாது என்று மலர்க்கொடி கூறினாள்?
3. மலர்க்கொடி தொலைக்காட்சியில் என்னவெல்லாம் பார்த்ததாகக் கூறினாள்?

## பொருத்தமான சொல்லால் நிரப்புவோம்....

ராணி தோட்டத்தில் பூ பறித்துக்கொண்டு இருந்தாள்__________ கையில் ஒரு பூக்கூடை இருந்தது. அப்போது அங்கு வரதன் வந்தான் ______________ கையில் இரண்டு பொம்மைகள் இருந்தன _____________ பார்ப்பதற்கு அழகாக இருந்தன. ராணி, பொம்மையின் தலையில் செம்பருத்திப் பூ வைத்தாள் ___________சிவப்பு வண்ணத்தில் அழகாக இருந்தது. பிறகு ___________________ மாமர ஊஞ்சலில் விளையாடினார்கள்.












## பறவைகளின் ஒலிகளை அறிந்து கோடிட்ட இடங்களை நிரப்புவோம்







கரையும் அகவும் பேசும் அலறும் கூவும்

-------------------------------------- --------------------------------------

-------------------------------------- --------------------------------------

--------------------------------------

## கதையைப் படித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஓர் அடர்ந்த காட்டில், ஆந்தை, குரங்கு, முயல் ஆகிய மூன்றும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் இரவு ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனை அறிந்த ஆந்தை மரத்தடியில் சோர்வுடன் தூங்கும் முயலைப் பார்த்து அலறியது. அலறல் சத்தம் கேட்டு முயல் விழித்துக்கொண்டது. அதற்குள் தண்ணீர் முயலைச் சூழ்ந்து விட்டது. முயல் தண்ணீரில் தத்தளித்தது. இதனைக் கண்ட குரங்கு, ஒரு கயிற்றை முயலை நோக்கிப் போட்டது. அந்தக் கயிற்றைப் பிடித்த முயலை குரங்கு மேலே தூக்கி உயிர்பிழைக்க வைத்தது. முயல் தன் நண்பர்களுக்கு நன்றி தெரிவித்தது. நண்பர்கள் மூவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

### வினாக்கள்

1. மரத்தடியில் உறங்கியது யார்?
2. ஆந்தை முயலை எவ்வாறு காப்பாற்ற உதவியது?
3. குரங்கு முயலை காப்பாற்ற என்ன செய்தது?
4. ஆற்றில் ஏற்படுவது ________________________

அ) வெல்லம் ஆ) வெள்ளம் இ) வெழ்ழம்

## கலையும் கைவண்ணமும்

### மின்அட்டையில் வாழ்த்து அட்டை உருவாக்குதல்

தேவையான பொருள்கள் : மின் அட்டை, பசை

வண்ண நூல்கள்

- ☆ மின்அட்டையின் ஓரங்களில் வண்ண நூல்களை ஒட்டி அலங்காரம் செய்ய வேண்டும்.
- ☆ தமக்குப் தேவையான படம் வரைந்து அதன் மேல் வண்ண நூல்களை ஒட்ட வேண்டும்.
- ☆ தேவையான வாழ்த்துச் செய்தியை அட்டையின் நடுப்பகுதியில் எழுதி, வாழ்த்து அட்டை உருவாக்குக.

## சொந்த நடையில் கூறுக.

தொலைக்காட்சியின் நன்மைகளைப் பற்றி உம் சொந்த நடையில் கூறுக.

## அறிந்து கொள்வோம்

தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர்
ஜான் லோக் போர்டு
விமானத்தைக் கண்டறிந்தவர்
ஆல்பர்ட் ரைட், வில்பர்ட் ரைட்
வானொலியைக் கண்டறிந்தவர்
மார்க்கோனி

## 9. படவிளக்க அகர முதலி

| | |
|---|---|
|  | **பனிக்கரடி**<br>இது உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும். இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாட வல்லது. இதனைத் துருவக்கரடி எனவும் கூறுவர். |
|  | **பால்**<br>சத்துமிக்க ஓர் உணவு. இதில் கால்சியம், பொட்டாசியம், புரதம் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. உலகளவில் மிகுதியாகப் பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிறது. |
|  | **பிண்ணாக்கு**<br>விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுகிறது. தேங்காய், எள், கடலை போன்றவற்றிலிருந்து இதனைத் தயாரிக்கின்றனர். |
|  | **பீர்க்கங்காய்**<br>நார்ச்சத்துமிக்க காய்களுள் ஒன்று. இதன் தோல், நோயைக் குணப்படுத்தும். இது கொடி வகையைச் சார்ந்தது. |
|  | **புறா**<br>முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவைகளுள் ஒன்று. இப்பறவைகள், குச்சிகள், குப்பைகள் கொண்டு கூடு கட்டுகின்றன. இவை, தானிய வகைகளை இரையாக உட்கொள்கின்றன. |
|  | **பூண்டு**<br>மருத்துவப் பயன்மிக்க ஓர் உணவுப்பொருள். இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்கக் கூடியது. இது பருவகாலத் தாவரம் ஆகும். |

| | |
|---|---|
|  | **பெங்குயின்**<br>குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும். இது, பறவை இனத்தைச் சார்ந்து இருந்தாலும், பறக்க முடியாது. மனிதர் நடப்பதுபோல இதன் நடை அமைந்திருக்கும். நீரில் நன்றாக நீந்திச் செல்லும் |
|  | **பேரிச்சம்பழம்**<br>இது, பனைவகையைச் சார்ந்தது. இதன் பழம் மருத்துவக் குணமும் உடையது. இதில் இரும்புச்சத்து இருப்பதால், இரத்தசோகையை நீக்கும். |
|  | **பை**<br>இது பொருள்களை எடுத்துச் செல்ல உதவுகிறது. துணி முதலான பொருள்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. பல வண்ணங்களில் சந்தையில் கிடைக்கிறது. |
|  | **பொங்கல் விழா**<br>இவ்விழா, தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. உணவுப் பொருள்களை விளைவிக்க உதவுவது இயற்கை. அதற்கு நன்றி செலுத்தும் வகையில் இதனைக் கொண்டாடுகின்றனர். |
|  | **போர்வாள்**<br>பண்டைக் காலத்தில், மன்னர்கள் பயன்படுத்திய படைக் கருவிகளுள் ஒன்று. போரிடும் காலங்களில், வீரர்கள் இக்கருவியைப் பயன்படுத்துவர். |
|  | **பௌவம்**<br>கடலைக் குறிக்கும் ஒரு சொல், பௌவம். பூமியின் பெரும்பகுதி கடலாலேயே சூழப்பட்டுள்ளது. கடல் நீர் உப்புக் கரிக்கும். கடல் நமக்கு மீன், சிப்பி, நண்டு, முத்து, பவளம் முதலான வளங்களைத் தருகிறது. |

## அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அகழாய்வு | - | நிலத்தைத் தோண்டி ஆராய்தல் |
| 2. | அசடு | - | பேதைமை |
| 3. | அடாத செயல் | - | தகாத செயல் |
| 4. | அடையாளம் | - | இனங்காணல் |
| 5. | அவசரம் | - | விரைவு |
| 6. | ஆதி | - | முதல் |
| 7. | ஆபரணம் | - | அணிகலன் |
| 8. | ஆர்வம் | - | விருப்பம் |
| 9. | இசைந்து | - | ஏற்றுக்கொண்டு |
| 10. | ஏராளமான | - | நிறைய |
| 11. | ஓங்குதல் | - | உயர்தல் |
| 12. | குற்றம் | - | மாசு / தவறு |
| 13. | கேளாமல் | - | கேட்காமல் |
| 14. | கேளிர் | - | உறவினர் |
| 15. | கோபம் | - | சினம் |
| 16. | செம்மை | - | சிறப்பு |
| 17. | தகவல் | - | செய்தி |
| 18. | தொன்மை | - | பழைமை |
| 19. | நஷ்டம் | - | வருமானம் இழப்பு |
| 20. | நல்கூர்ந்தார் | - | வறுமையுற்றவர் |
| 21. | பதில் | - | விடை |
| 22. | பயம் | - | அச்சம் |
| 23. | பாதிப்பு | - | விளைவு |
| 24. | புத்திசாலி | - | அறிவாளி |
| 25. | பொலிவு | - | அழகு |
| 26. | பொழியும் | - | பெய்யும் |
| 27. | மௌனம் | - | அமைதி |
| 28. | இல்லம் | - | வீடு |
| 29. | பராமரித்தனர் | - | நிர்வகித்தனர் |
| 30. | அயர்ந்து | - | சோர்வு, களைப்பு |
| 31. | அமிழ்தினும் | - | சாவாமருந்து, தேவமிருதம் |
| 32. | செம்மொழி | - | இலக்கியப்பழமை வாய்ந்தமொழி |
| 33. | பறைசாற்றும் | - | அறிவித்தல், பிரகடனம் |

## கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br><br>அவற்றின் மீதான கருத்தினை / நோக்கினை வெளிப்படுத்துவர்.<br><br>தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல் களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br><br>வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | பண்புடன் உரையாடுவர்.<br><br>பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர்.<br><br>தமக்கு அறிமுகமான, செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்கு தடையின்றியும் விவரித்துக் கூறுவர்.<br><br>கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை / செய்திகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர். | தெளிவான ஒலிப்புடன் குறில் - நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர்.<br><br>முற்றுப் புள்ளி, வினாக் குறி ஆகிய நிறுத்தக் குறியீடுகளை அறிந்து படிப்பர்.<br><br>எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர்.<br><br>படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு, அவற்றின் சரியான பொருளை அறிந்துகொள்ள முயல்வர். | புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர்.<br><br>செய்தி / கதைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர். கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர்.<br><br>அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில் நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர். |

| நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல் ) | சொற்களஞ்சியப் பெருக்கமும், சொல்லாட்சித் திறன்களும் |
| --- | --- | --- |
| இன எழுத்துகளை அறிந்துகொள்வர்.<br>ஒருமை, பன்மை வேறுபாடு அறிவர். (அது - அவை ) | சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகள்<br>கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்வர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>உணவுப்பொருள்களின் பெயர்கள்<br>ஆடை அணிகலன்களின் பெயர்கள்<br>மரம், செடி, கொடிகளின் பெயர்கள்<br>பொது இடங்களின் பெயர்கள் ( பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை ..... )<br>பழமொழிகள்<br>மரபுத்தொடர்கள் |

| படைப்புத் திறன்கள் | விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல் | வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல். |
| --- | --- | --- |
| சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர்<br>ஒரே சொல்லில் தொடங்கும் / முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்து கொள்வர்.<br>கதையைத் தொடர்ந்து கூறி முடிப்பர் | தூய்மை பேணுதல்<br>விதிகளைப் பின்பற்றுதல்<br>பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>உண்மை பேசுதல்<br>நட்புணர்வு | தன்னை அறியும் திறன்<br>சிக்கல் தீர்க்கும் திறன்<br>முடிவெடுக்கும் திறன்<br>கூர்சிந்தனைத் திறன்<br>பிறரை அவர் நிலையிலிருந்து பார்க்கும் திறன்<br>உணர்வுகளைக் கையாளும் திறன் |